30.04.2015

தினகரன்

**வேளாண் கல்லூரிகளில் சேர மே 15 முதல் விண்ணப்பம் விநியோகம்**

கோவை : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக இளங்கலை படிப்பிற்கான விண்ணப்பங்கள் மே 15ம் தேதி முதல் இணையதளம் மூலம் வினியோகிக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உறுப்பு மற்றும் இணைப்பு கல்லூரிகளில் 13 வகையான பட்டப்படிப்புகள் வழங்கப்படுகிறது. உறுப்பு கல்லூரியில் 1,220 இடங்கள், இணைப்பு கல்லூரியில் 1,080 இடங்கள் என மொத்தம் 2,300 இடங்கள் நிரப்பப்படவுள்ளது. இதில், 50% இடங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தாலும், 50 சதவீத இடங்கள் அந்தந்த கல்லூரிகளாலும் நிரப்பப்படுகிறது. இப்பாடத்தில் மேல்நிலைப்பள்ளி கல்வி அல்லது அதற்கு இணையான கல்வி பிரிவில் பொது கல்வியில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பங்களை www.tnau.ac.in/admission.html என்ற இணையதளத்தில் சென்று பூர்த்தி செய்ய வேண்டும். 13 பட்டப்படிப்புகளுக்கும் ஒரே விண்ணப்பம் போதுமானது. பொது பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணமாக ரூ.600ம், எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு ரூ.300ம் ஆகும். இணையதளம், டெபிட் கார்டு மற்றும் கிரெடிட் கார்டு பயன்படுத்தி செலுத்தலாம் அல்லது பதிவிறக்கம் செய்யப்பட்ட சலானை எந்தவொரு ஸ்டேட் வங்கி கிளைகளிலும் செலுத்தலாம். வேளாண் பல்கலைக்கழகத்தின் மையங்களிலும் மாணவர்கள் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பெற சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இணையதளத்தின் மூலமாக மே 15 முதல் ஜூன் 13 வரை விண்ணப்பங்களை இணையதளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க ஜூன் 13ம் தேதி கடைசி என்றும், தரவரிசை பட்டியல் ஜூன் 20ம் தேதி வெளியிடப்படும்

எனவும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி தெரிவித்துள்ளார்.

**விலை குறைவால் தேயிலை அறுவடை செய்ய முன்வராத விவசாயிகள்**

குன்னூர், : விலை குறைவு எதிரொலியால் தேயிலை அறுவடை செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் 63 ஆயிரம் சிறு, குறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். இத்தொழிலை நம்பி லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பணியாற்றி வருகின்றனர். இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பெரும்பாலான தேயிலை தூள் குன்னூரில் உள்ள அரசு மற்றும் தனியார் தேயிலை ஏல மையங்கள் சார்பில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது பரவலான மழை பெய்து வருவதால் தேயிலை மகசூல் பன்மடங்கு உயர்ந்துள்ளது. இதனால் தேயிலை ஏல மையங்களுக்கு வரும் தேயிலை தூளின் அளவும் அதிகரித்துள்ளது. ஆனால் எதிர்பார்த்த அளவு தேயிலை தூளை வர்த்தகர்கள் கொள்முதல் செய்யாததால் நாள்தோறும் 20 முதல் 50 சதவீதம் வரை தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கமடைந்து வருகிறது. இதுமட்டுமல்லாமல் தேயிலை தூளின் விலையை குறைத்து ஏலம் கோருவதால் உற்பத்தியாளர்கள் செய்வதறியாமல் திகைத்து போய் உள்ளனர். 7 முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை தேயிலை அறுவடை செய்யும் விவசாயிகள் தற்போது மாதத்துக்கு ஒருமுறை கூட அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் தேயிலை ஆலைகளின் உற்பத்தி திறன் மிகவும் குறைவாக இருப்பதால் கோட்டா முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வாரம் 3 நாட்கள் அல்லது 5 நாட்கள் மட்டுமே குறிப்பிட்ட அளவிலான பசுந்தேயிலை மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. மேலும் ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு ரூ.8 முதல் 10 வரை வழங்கப்படுகிறது. ஆனால் தொழிலாளர்களின் சம்பளம், தோட்ட பராமரிப்பு என கணக்கிடும் பட்சத்தில் விவசாயிகளுக்கு எவ்வித லாபமும் கிடைப்பதில்லை. இதன்காரணமாக, பெரும்பாலான விவசாயிகள்

பசுந்தேயிலையை அறுவடை செய்யாமல் இருப்பதால் செடிகள் வறண்டு, இலைகள் வீணாகி வருகிறது. இதனால் பெரு நஷ்டத்தில் விவசாயிகளின் குடும்பங்கள் தள்ளாடி வருகின்றன. அரசு கூட்டுறவு ஆலைகள் மட்டுமல்லாமல் தனியார் தொழிற்சாலைகளிலும் இதேநிலை நீடிக்கிறது. மேலும் பெரிய கம்பெனி எஸ்டேட்டுகளிலும் உற்பத்தி அதிகரிப்பு காரணமாக விற்பனையாகாத தேயிலை தூள்கள் அனைத்தும் அங்குள்ள குடோன்களில் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. சீசன் காலங்களில் தரமற்ற தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படும் என்ற தவறான கருத்து வர்த்தகர்கள் மத்தியில் நிலவி வருவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் புகார் கூறியுள்ளனர். ஏற்கனவே, பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வரப்பட்ட நிலையில் உற்பத்தியாளர்கள் இடைக்கால தடை பெற்றுள்ளதால் இந்நடவடிக்கை தொடர இயலாமல் தேயிலை வாரியம் திணறி வருகிறது. ஏற்கனவே, அமல்படுத்தப்பட்ட விலை பகிர்வு திட்டமும் உறுதியாக அமல்படுத்தப்படாததால் விவசாயிகள் மத்தியில் அதிருப்தி நிலவி வருகிறது. 2 மாதத்திற்கு மேல் தேயிலை மகசூல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கும் நிலையில், பசுந்தேயிலை விலை சரிந்து வருவதால் விவசாயிகளில் சிலர் தங்களின் தோட்டங்களை பராமரிப்பதற்காக இலைகளையே உரமாக பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் வங்கிகளின் மூலம் பெற்ற கடனை திருப்பி செலுத்த முடியாமலும் இடுபொருட்கள் வாங்க முடியாத நிலைக்கும் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக தேயிலை வாரிய அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்து, மகசூல் காலங்களில் பசுந்தேயிலை தூளுக்கான விலையை உற்பத்தியாளர்கள் தடையின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

## கொள்ளிடம் வட்டாரத்தில் குறுவை விதை நெல் 10 டன் இருப்பு அதிகாரி தகவல்

கொள்ளிடம், : கொள்ளிடம் வட்டாரத்தில் கோடை, குறுவை விதை நெல் 10 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.நாகை மாவட்டம் கொள்ளிடம்

வட்டார வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ் கூறியது: ஏ.டி.டி. 43 ரக நெல்விதைகள், கொள்ளிடம் வட்டாரத்தில் உள்ள அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும், வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த ரக நெல், கோடை மற்றும் குறுவை சாகுபடி செய்ய ஏற்றதாகும். இந்த விதைக்கு மானியம் இல்லை. இந்த விதை நெல்லின் விலை ஒரு கிலோ ரூ.28.25. இந்த ரக நெல்விதை, கொள்ளிடம் பகுதி விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக 10 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நெல் விதையை, அந்தந்த வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் வாங்கி பயன்படுத்தி கொள்ளலாம் என்றார். இது குறித்து நாதல்படுகை விவசாயிகள் சங்க தலைவர் ரவிசுந்தரம் கூறுகையில், வேளாண் விரிவாக்க மையங்களிலும், வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும், கோடை மற்றும் குறுவை சாகுபடிக்கு ஏ.டி.டி. 43 ரக விதை நெல் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. புதியரக நெல்விதைகள் இதுவரை, வேளாண் அலுவலகங்கள் மூலம் மானிய விலையில் கிடைக்கவில்லை. இருப்பும் இல்லை. பழமையான ரகமான ஏ.டி.டி 43 ரக நெல்விதை மட்டும் மானியம் இல்லாமல் முழு விலைக்கு, தனியார் கடைகளில் விற்பது போல் விற்பணன செய்யப்படுகிறது. இந்த ரக விதையை விவசாயிகள் பெரிதும் விரும்புகின்றனர். இருந்தும் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. புதிய ரக நெல் விதைகளுக்கு அரசு மானியம் வழங்குவது போல, ஏ.டி.டி. 43 ரக விதைக்கும் 50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்

**கொளுத்தும் வெயிலுக்கு இதமளிக்கும் இளநீர் கோ. திருஞானசெல்வம்**

பகலில் சுட்டெரிக்கிறது கடும் வெயில். இதன் தாக்கம் இரவு வரையில் நீடிக்கிறது. தமிழகத்தில் பல நகரங்களில் 100க்கும் கூடுதல் டிகிரியை

தாண்டி வெயில் கொளுத்துகிறது. இது நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கிறது. கடந்தாண்டை காட்டிலும் இந்த ஆண்டு கோடை வெயில் மார்ச் மாதத்திலேயே தொடங்கி மக்களை வாட்ட தொடங்கி விட்டது. கடும் வெப்பத்தினால் மக்களின் உடலில் பாதிப்பு ஏற்படுகிறது. உடலில் வழக்கத்தை விட அதிகமாக வியர்வை வெளியேறுவதால் சோர்வு ஏற்படுகிறது. இவற்றை போக்க மக்கள் நாடி செல்லது குளிர்பானங்களைதான்.இதில் அதிகமாக மக்கள் விரும்புவது இயற்கை குளிர்பானமான இளநீரைதான். தற்போது இளநீர் விற்பனை சூடு பிடித்துள்ளது. சிதம்பரம் மற்றும் சுற்றுபுற பகுதிகளில் இருந்து சைக்கிள்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் வியாபாரிகள் இளநீர் எடுத்து வந்து விற்பனை செய்கின்றனர். கிராமங்களில் ரூ.4 முதல் ரூ.7 வரை இளநீரை மொத்தமாக வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதனை நகரங்களுக்கு கொண்டு வந்து ரூ.20வரை விற்கின்றனர். சாதாரண நாட்களில் ரூ.15க்கு விற்று வந்த இளநீர் தற்போது ரூ.20 வரை விற்கப்படுகிறது. அதுவும் இளநீர் எடுத்த வந்த சில மணி நேரத்திலேயே விற்பனையாகி விடுகிறது. இதனால் உச்சி வெயில் நேரத்தில் இளநீர் கிடைப்பதில்லை.உடலுக்கு குளிர்ச்சி தரும் வெள்ளரி பிஞ்சு, மற்றும் தர்பூசணி பழங்கள் விற்பனையும் அதிகரித்துள்ளது. இதே போன்று குளிர்ச்சி தரும் பனை நுங்கு தற்போது நகர்புறங்களில் அதிகமாக கிடைப்பதில்லை. வெப்பம் அதிகரிக்க, அதிகரிக்க இயற்கை பானமான இளநீர் மற்றும் குளிர்ச்சி தரும் வெள்ளரி பிஞ்சு, பனை நுங்கு, தர்பூசணி பழங்களின் விலையும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. இதுக்குறித்து இளநீர் வியாபாரி ஆச்சாள்புரம் காளிமுத்து கூறுகையில், தானேபுயலால் ஏராளமான தென்னை மரங்கள், பனை மரங்கள் சாய்ந்து விட்டன. தற்போது கோடையில் கிராமங்களில் இளநீர் கிடைப்பதே அரிதாக உள்ளது. நாங்கள் தோட்டங்களில் தேடி கண்டுபிடித்து இளநீரை மொத்தமாக வாங்கி வந்து விற்கிறோம். அதில் செலவு போக தினமும்

ரூ.200 முதல் ரூ.250 வரை தான் லாபம் கிடைக்கும். இன்று பாட்டிலில் அடைத்து வைக்கப்பட்டுள்ள குடிநீரே 20க்கு விற்கும் போது உடல்நலத்திற்கு உகந்த இளநீர் ரூ.15க்கு கிடைக்கிறதே என மக்கள் சந்தோஷப்படுவதில்லை. எங்களிடம் தான் பேரம் பேசுகின்றனர் என்றார். இளநீரின் மருத்துவ குணங்கள் குறித்து சிதம்பரம் காமராஜ் அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் அர்ச்சுணன் கூறுகையில், பொதுவாக இளநீர் உடலுக்கு குளிர்ச்சியை அளிக்க கூடியது. இருமல், சளி, ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் பச்சை இளநீர் அருந்தக்கூடாது. ஆனால் செவ்விளநீர் சாப்பிடலாம். அது மருத்துவ குணம் வாய்ந்தது. இளநீரில் கால்சியம் அதிகமுள்ளது. குறிப்பாக கோடையில் ஏற்படும் அம்மை மற்றும் சூட்டினால் ஏற்படும் கட்டிகள், வயிற்று போக்கு ஆகியவற்றுக்கு இளநீர் அருமருந்து. வெறும் வயிற்றில் இளநீர் சாப்பிடுவதை விட ஆகாரத்திற்கு பிறகு சாப்பிடுவது பித்தத்தை தணிக்கும் என்றார்.

## 40 விவசாயிகளுக்கு எலி கட்டுப்பாட்டு பயிற்சி

ஒரத்தநாடு, : ஒரத்தநாடு வட்டாரத்தில் அட்மா திட்டத்தில் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான சீரமைப்பு திட்டத்தின்கீழ் தொண்டராம்பட்டில் 40 விவசாயிகளுக்கு எலி கட்டுபாடு பற்றி முகாம் பயிற்சி நடந்தது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சேகர் தலைமை வகித்தார்.தொண்டாரம்பட்டு ஊராட்சி தலைவர் கதிரவன் முன்னிலை வகித்தார். ஒரத்தநாடு வேளாண்மை உதவி இயக்குநர் பாலசரஸ்வதி வரவேற்றார். எலியின் வாழ்விட குறிப்பு பற்றி வேளாண் இணை இயக்குநர் (மாநில திட்டம்) சீனிவாசன், எலி ஒழிப்பு பயிற்சியை ஈச்சங்கோட்டை வேளாண் கல்லூரி பூச்சியியல் துறை பேராசிரியர் கல்யாணசுந்தரம், நீடமங்கலம் பூச்சியியல் துறை பேராசிரியர் ராஜாரமேஷ், ஓய்வுபெற்ற வேளாண் துணை இயக்குநர் ஆகியோர்

அளித்தனர். வேளாண்மை அலுவலர் வெங்கடாஜலம், துணை வேளாண்மை அலுவலர் வெங்கடாஜலம், அட்மா தொழில்நுட்ப மேலாளர் முத்துகுமார், அட்மா திட்ட பொருள் சார்ந்த வல்லூநர்கள் லோகநாதன், கண்ணன் ஆகியோர் விஷம் கலந்து உணவு தயாரித்து எலியை கட்டுபடுத்தும் முறை செயல் விளக்கம் அளித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளுக்கு பசுந்தாள் எரு விதை அளிப்பு**

உத்திரமேரூர்: இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் விதமாக, உத்திரமேரூரில் விவசாயிகளுக்கு நேற்று முன் தினம் இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்கத்தின் சார்பில், இலவசமாக பசுந்தாள் எரு விதை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.நிகழ்ச்சியில், உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட, 53 விவசாயிகளுக்கு, இரண்டு கிலோ வீதம் பசுந்தாள் எரு விதையை, வேளாண் வணிக மற்றும் விற்பனை துறை துணை இயக்குனர் சந்துரு வழங்கினார்.அப்போது, சந்துரு பேசியதாவது:அண்மை காலமாக, விவசாயிகள் இயற்கை உரங்களை தவிர்த்து, ரசாயன மருந்துகள் மற்றும் உரங்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனால், மண்ணின் தன்மையும், விதையின் தரமும் முற்றிலுமாக அழிந்து, ஆரோக்கியமற்ற உணவுப்பொருட்கள் உற்பத்தியாகும் சூழல் ஏற்படுகிறது.இவ்விதமான உணவுப்பொருட்கள் மூலம் மனிதனுக்கு பல்வேறு வகையான நோய்கள் உருவாகின்றன. எனவே, விவசாயிகள், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து, எதிர்கால சந்ததியினருக்கு நலன் பயத்திட வேண்டும்.இவ்வாறு, அவர்

பேசினார்.இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு சங்கத்தின், காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் ஏழுமலை தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சியில், வேளாண் உதவி அலுவலர் ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பாதி மானியம் ! : தோட்டக்கலை துறையின் மூலம்... : நிரந்தர பந்தல் அமைக்க நிதியுதவி**

விழுப்புரம்: நிரந்தர பந்தல் அமைத்து காய்கறி சாகுபடி செய்து விவசாயிகள் கூடுதல் லாபம் பெற, தோட்டக்கலை துறை மூலம் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.மாவட்டத்தில் ஒலக்கூர், மரக்காணம், மயிலம், வானூர், செஞ்சி, வல்லம், மேல்மலையனூர், திருநாவலூர் வட்டாரப் பகுதிகளில் பந்தல் காய்கறிகள், பெருமளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இவை உள்ளூர் மற்றும் கோயம்பேடு மார்க்கெட்டில், நல்ல விலைக்கு விற்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் இம்முறையில் சாகுபடி செய்ய ஆர்வம் செலுத்துகின்றனர். விவசாயிகள் சிலர் தற்போது சவுக்கு கழிகள், நயிலான் கயிறு மூலம் பந்தல் அமைக்கின்றனர். . இவற்றை பராமரிக்க விவசாயிகள், மீண்டும், மீண்டும் செலவு செய்கின்றனர். இதனை தவிர்க்க, ஒருமுறை மட்டுமே முதலீடு செய்து, நிரந்தர பந்தல் அமைக்கலாம். நிரந்த பந்தல் அமைக்க முன் வரும் விவசாயிகளுக்கு, தோட்டக்கலை துறை மூலம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இரண்டரை ஏக்கர் ( ஒரு ஹெக்டேர்) பரப்பளவிற்கு ஆகும் மொத்த செலவு, 4 லட்சம் ரூபாயில், 50 சதவீதம் மானியமாக, 2 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. கான்கீரிட், கல் தூண்கள் மற்றும் பி.வி.சி., பைப்புகளில் கான்கீரிட் கலவை நிரப்பி தூண்களாகப் பயன்படுத்த வேண்டும். இரும்பு கம்பிகளைப் கொண்டு பந்தல் அமைப்பதன் மூலம் நீண்ட காலத்திற்கு இவற்றை பயன்படுத்திக்

கொள்ள முடியும். இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்புவோர், மாவட்ட தோட்டக்கலை துறை மற்றும் வட்டார தோட்டக்கலை துறை அலுவலர்களை நேரில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

## மக்காசோளத்தை இருப்பு வைத்து விற்கலாம் வேளாண் வணிக துணை இயக்குநர் அறிவுரை

விழுப்புரம்: விவசாயிகள் அறுவடை செய்த மக்காசோளத்தை இருப்பு வைத்து விற்பனை செய்தால் கூடுதல் லாபம் பெறலாம் என வேளாண்துறை வணிக துணை இயக்குநர் ஞானவேல் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் வேளாண் வணிகதுணை இயக்குநர் ஞானவேல் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மக்காசோளம் பயிரிடும் பரப்பானது கடந்தாண்டை விட 27 சதவீதம் அதிகரித்து இந்தாண்டு 1.74 லட்சம் எக்டராக உள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், தியாகதுருகம், சின்னசேலம் ஆகிய பகுதிகள் மக்காசோளம் பயிரிடும் முக்கிய இடங்களாக உள்ளது. தமிழ்நாட்டில் இதற்கான வரத்து துவங்கியுள்ள நிலையில் மக்காசோளம் தற்போது குவிண்டாலுக்கு 1330 ரூபாய் முதல் 1360 வரை விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகங்களில் இயங்கி வரும் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகளின்படி தரமான மக்காசோளத்தை இருப்பு வைத்து விற்பனை செய்யும்பட்சத்தில், வரும் ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் குவிண்டாலுக்கு 1420 ரூபாய் முதல் 1450 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அறுவடை செய்த மக்காசோளத்தை சேமித்து வைத்து வரும் ஜூன், ஜூலை மாதங்களில் விற்பனை செய்து கூடுதல் லாபம் பெறலாம். இத்தகவலை வேளாண் வணிகதுணை இயக்குநர் ஞானவேல் தெரிவித்துள்ளார்.

**சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காச்சோளம் வரத்து அதிகரிப்பு**

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம் வரத்து அதிகரித்தது. சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று முன்தினம், 180 மூட்டை மக்காசோளம் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. ஒரு மூட்டை அதிகபட்சமாக 1339 ரூபாய், குறைந்தபட்சமாக 1,289 ரூபாய் என விலை நிர்ணயிக்கப் பட்டது. எள் ஒரு மூட்டை அதிகபட்சமாக 5,369 ரூபாய், குறைந்தபட்சமாக 4,676 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப் பட்டது. கடந்த வாரத்தில் விற்பனைக்கு வந்த 300 மூட்டை மக்காசோளம், 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இதேபோல் 85 எள் மூட்டைகள், 4 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

**நோய் தாக்குதலால் விளைச்சல் பாதிப்பு ; தேங்காய் விலை உயர்வால் மகிழ்ச்சி**

கிருஷ்ணகிரி; கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்னை மரங்களுக்கு நோய் தாக்குதல் ஏற்பட்டதால், அதன் விளைச்சல் குறைந்த நிலையில், தற்போது தேங்காய் விலை உயர்ந்துள்ளதால், குறைந்தளவு விளைச்சல் பெற்ற விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தமிழகத்தில், கோவை, ஈரோடு மாவட்டத்துக்கு, அடுத்தபடியாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிக பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில், 16 ஆயிரம் ஹெக்டேரில், 32 லட்சம் தென்னை மரங்கள் இருக்கிறது. இங்கு விளையும் தேங்காய், வெளி மாவட்டங்கள் மட்டுமன்றி, வெளி மாநிலங்களுக்கும், அதிக அளவில் விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், காங்கேயம் உள்ளிட்ட பகுதியில் உள்ள எண்ணெய் உற்பத்தி நிலையங்களுக்கு, இங்கிருந்து கொப்பரை தேங்காய், விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில், மாவட்டத்தில் இந்த ஆண்டு, தென்னையில் நத்தை புழுக்கள் தாக்குதல் மற்றும்

கருந்தலை புழுக்களின் தாக்குதல் அதிகம் இருந்ததால், பல இடங்களில் மரங்கள் காய்ந்து போனது.குறிப்பாக, தென்னை அதிகம் விளையும் பாரூர், அரசம்பட்டி, மஞ்சமேடு, பென்டரஅள்ளி பகுதியில் மட்டும், நத்தை புழு மற்றும் கருந்தலை புழுக்களின் தாக்குதலால், 52 ஆயிரம் தென்னை மரங்கள் காய்ந்து போனது. மேலும், நோய் தாக்குதலால், தேங்காய் விளைச்சல் கடுமையாக குறைந்துள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டம் மட்டுமன்றி, தமிழகம் முழுவதும் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், தேங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. இக்காரணங்களால், கடந்த இரண்டு மாதமாக, தேங்காயின் விலை உயர்ந்து வருகிறது. தற்போது, முதல் தர தேங்காய், 20 ரூபாய்க்கும், இரண்டாம் தர தேங்காய், 15 ரூபாய்க்கும், மூன்றாம் தர தேங்காய், 10 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.தற்போது, தேங்காயின் விலை உச்சத்தை எட்டியுள்ளதை அடுத்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வியாபாரிகள், தங்கள் மண்டிகளில் குவித்து வைத்திருந்த தேங்காய்களை உரித்து, சென்னை போன்ற வெளி மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். குறிப்பாக பர்கூர், வரட்டணப்பள்ளி, கந்திகுப்பம் சுற்றுவட்டார பகுதியில் அதிக அளவில் தேங்காய் மண்டிகள் உள்ளது. இந்த மண்டிகளில் இருந்து தற்போது நாள்தோறும், 50 ஆயிரம் தேங்காய்க்கு மேல், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**உழவுப்பணிகள் மும்முரம்**

ரெட்டியார்சத்திரம்: இரு ஆண்டுகளாக பருவ, கோடை மழை போதியளவு இல்லாததால் ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பகுதியில் விவசாய பணிகள் கடும் பாதிப்படைந்தன. கடந்த 4 வாரங்களாக, பகலில் அதிக வெப்பமும், மாலையில் மேகமூட்டமும் நீடிக்கிறது. பிற பகுதிகளில் பரவலாக பெய்தபோதும், ரெட்டியார்சத்திரம், ஸ்ரீராமபுரம், கன்னிவாடி

பகுதிகளில் மழை இல்லை. இந்நிலையில் கோடை சாகுபடிக்கான பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். முதற்கட்டமாக நிலத்தை தயார் செய்ய, உழவுப்பணியை துவக்கியுள்ளனர்.

**அதிகரிப்பு- வெயிலின் தாக்கத்தால் தென்னங்கிடுகுகள் விற்பனை... பெரியகுளத்தில் இருந்து தினமும் 2 லாரிகளில் அனுப்பப்படுகிறது**

பெரியகுளம்: கத்திரிவெயில் துவங்குவதற்கு முன்பே பெரிய குளத்திலிருந்து தினமும் இரண்டு லாரிகளில் வெளியூர்களுக்கு தென்னங்கிடுகள் செல்கிறது. ஆர்டர் செய்தவர்களுக்கு மட்டுமே தென்னங்கிடுகுகள் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பெரியகுளத்தில் தென்னங்கிடுகு அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னைங் கிடுகு தயாரிக்கும் பணியில் தினமும் ஐம்பதிற்கும் அதிகமான குடிசை தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆண்டு கோடைமழையால், வெயிலின் தாக்கம் குறைந்தளவே இருந்தது. மாவட்டத்தில் பல ஊர்களில் சித்திரை திருவிழா நடந்து வருகிறது. திருவிழாக்களில் பந்தல் அமைப்பதற்கும், தற்காலிக நீர்மோர் பந்தலுக்கு கிடுகள் அதிகளவில் தேவைப்படுகிறது. பெரியகுளத்திலிருந்து மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகர் உட்பட பல மாவட்டங்களுக்கு கிடுகள் அனுப்பிவைக்கப்படுகின்றன. கத்திரி வெயில் மே 4 ல் துவங்குகிறது. கத்தரிக்கு முன்பாகவே தற்காலிக பந்தலுக்காக மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம் மாவடங்களுக்கு தினமும் இரண்டு லாரிகளில் தென்னங்கிடுகள் விற்பனைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. கிடுகு வியாபாரி முருகன் கூறியதாவது: கோடை மழை பெய்தாலும், கடந்த ஆண்டிற்கு நிகராக இந்தாண்டும் கிடுகள் பயன்பாடு அதிகரித்துள்ளது. 50 எண்ணிக்கை கொண்ட கிடுகு கட்டு நூறு ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கிடுகுகள் உடனே கொடுக்க முடிவதில்லை. ஆர்டரின் அடிப்படையில் வினியோகம் செய்கிறோம். வேலை செய்யும்

நபர் ஒருவருக்கு தினமும் 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது, என்றார்.

## மாவட்டத்தில் எக்டேருக்கு 10.5 டன் மாம்பழம் விளைச்சல்

சிவகங்கை: ""மாவட்டத்தில் 2,121 எக்டேரில் நடவு செய்துள்ள மா மரங்கள் மூலம் எக்டேருக்கு 10.5 டன் மாம்பழம் விளைகிறதென," சிவகங்கை தோட்டக்கலை துணை இயக்குனர் கல்யாணசுந்தரம் தெரிவித்தார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில் எஸ்.புதூர், காளையார்கோவில், கல்லல் உட்பட பெரும்பாலான இடங்களில் 2,121 எக்டேரில் விவசாயிகள் மாமரங்கள் நடவு செய்துள்ளனர். இங்கு, நீலம், பெங்களூரா, பங்கனபள்ளி, அல்போன்சா ரக மாமரங்கள் நடவு செய்துள்ளனர். ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் ஜூன் வரை மாம்பழம் விளைச்சல் இருக்கும். தற்போது, விளைச்சல் அதிகரித்துள்ளதால், எக்டேருக்கு 6.5 டன் முதல் 10.5 டன் வரை மாம்பழங்கள் விளைகின்றன. இவை ஏற்றுமதிக்கும், உள் மாவட்டங்களில் விற்பனைக்கும் அனுப்புகின்றனர். மல்லிகை: திருப்புவனம், திருப்பாச்சேத்தி, தவத்தாரேந்தல்,காஞ்சிரம், சிங்கம்புணரி, காளையார்கோவில், பெரியகோட்டை உள்ளிட்ட பகுதியில் 12 எக்டேரில் விவசாயிகள் மதுரை குண்டு மல்லிகை நடவு செய்துள்ளனர். கோடையில் விளைச்சல் அதிகரிக்கும். விவசாயிகள் எக்டேருக்கு 6.2 டன் முதல் 7.1 டன் வரை மல்லிகை பூக்களை அறுவடை செய்கின்றனர். குண்டு மல்லிகை பூ நடவிற்காக எக்டேருக்கு ரூ.10 ஆயிரம் மானியம் வழங்குகிறோம். சம்பங்கி: மாவட்ட அளவில் 40 எக்டேர் விவசாயிகள் சம்பங்கி பூக்களை நடவு செய்துள்ளனர். சொட்டு நீர் பாசன கருவி மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இதன் மூலம் ஏக்கருக்கு 25 கிலோ பூக்கள் கிடைக்கும். இவற்றை மதுரை மார்க்கெட்டில் விற்பனை செய்து லாபம் பார்க்கின்றனர். இப்பூக்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.37,500யை மானியமாக வழங்குகிறோம், என்றார்.

## கோடை மழைக்கு பயறு வகை பயிர் நடவு செய்ய ஆலோசனை

சிவகங்கை: மாவட்டத்தில் கோடை மழை பெய்து, நிலம் ஈரமடைந்துள்ளது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, குறைந்த நீர் தேவையுள்ள குறுகிய கால பயறு வகை பயிரான உளுந்து, பாசிப்பயறு ரகங்களில் விதைப்பண்ணை அமைக்கலாம். விதைப்பதற்கு முன் ஏக்கருக்கு தேவையான 8 கிலோ விதைக்கு32 கிராம் டிரைகோடெர்மா விரிடி என்ற உயிரின பூசணகொல்லி மருந்தினை கலந்து விதைத்திடவும். இவ்வாறு செய்வதால் விதை மூலம் பரவிடும் நோய்களை கட்டுப்படுத்தலாம். விதைத்த 35 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட விதை உற்பத்தியாளர் மூலம் விதைப்பண்ணைகளை பதிவு செய்திடவும். விதைப்பண்ணை அமைப்பதின் மூலம் கூடுதல் மகசூல், அரசு பிரிமியம், விதை பண்ணை விவசாயிக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கும். விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குனரை அணுகலாம் என உதவி இயக்குநர் இளங் கோவன் தெரிவித்தார்

## கறவை மாட்டு கடன் வழங்கும் விழா



அரியலூர் மாவட்டம் முத்துச்சேர்வாமடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் மானியம் இல்லாத நேரடி கடன் வழங்கும் விழா, சங்க வளாகத்தில் நடந்தது. கூட்டுறவு சங்க தலைவர் கல்யாணசுந்தரம் தலைமை தாங்கினார். சங்க செயலாளர் செல்வராசு முன்னிலை வகித்தார். விழாவில் மகளிர் சுய உதவிக்குழுவில் உள்ள 15 பேருக்குரூ.2 லட்சத்து 72 ஆயிரம் நேரடி கடனாகவும், 3 மாற்றுத்திறனாளி சிறப்பு குழுக்களுக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரமும் மற்றும் 26 பேருக்கு கறவை மாட்டு கடனாக ரூ.6 லட்சத்து 50 ஆயிரமும் வழங்கப்பட்டது. விழாவில் துணை தலைவர் சேகர், இயக்குனர்கள் மோகன், செந்தில், ராதா மதியழகன், சுப்பிரமணியன், ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக ரேஷன் கடை விற்பனையாளர் கண்ணன் வரவேற்றார். முடிவில் எழுத்தர் மணிமேகலை நன்றி கூறினார்.

**பர்கூர் மலைப்பகுதியில் பலாப்பழ சீசன் தொடங்கியது**



அந்தியூர் அருகே உள்ள பர்கூர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் பலாமரங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. தற்போது பலாப்பழ சீசன் தொடங்கியுள்ளது. இந்த சீசனில் கடந்த ஆண்டை விட மரத்தில் அதிக அளவில் பலாப்பழங்கள் காய்த்து தொங்குகின்றன. இதுகுறித்து மலைக்கிராம மக்கள் கூறும்போது, 'பர்கூர் மலைப்பகுதியில் விளையும் பலாப்பழங்களை மலைக்கிராம மக்கள் தாமரைகரை மற்றும் பர்கூர்

துருசணம்பாளையம் பகுதியில் வைத்து விற்பனை செய்து வருகிறார்கள். பலாப்பழ சுளைகளை பர்கூர் வழியாக செல்லும் பஸ் பயணிகள் வாங்கி செல்கின்றனர். மேலும் சுற்றுலா பயணிகள் பலாப்பழ சுளைகளை வாங்கி சுவைத்து, மலைப்பகுதியின் அழகை ரசித்தபடி செல்கின்றனர்' என்றார்கள்.

**கோடை வெயிலை சமாளிக்க நார்த்தாமலை சாலையோரத்தில் நுங்கு விற்பனை அமோகம்**



கோடை வெயிலை சமாளிக்கும் வகையில் நார்த்தாமலை சாலையோரம் நுங்கு விற்பனை அமோகமாக நடைபெற்றுவருகிறது.கோடைவெயிலின் தாக்கம் ஆண்டு தோறும் கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து கொண்டே செல்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கி விட்டது. கோடை வெயிலை சமாளிக்க பொதுமக்கள் நுங்கு, இளநீர், தர்பூசணி போன்ற உடலுக்கு குளிர்ச்சி தரும் பொருட்களை அதிக அளவில் வாங்கி உட்கொள்கின்றனர். இந்நிலையில் நார்த்தாமலையில் உள்ள சாலையோரத்தில் நுங்குகளை மலைபோல் குவித்து வைத்து சில்லறை வியாபாரிகள் அமோக விற்பனை செய்து வருகின்றனர். இதைபோல ஆங்காங்கே இளநீர், தர்பூசணி போன்ற வற்றின் விற்பனையும் அதிக அளவு உள்ளது. 5 நுங்கு ரூ.15-க்கு விற்பனை நுங்குகளை ஒரு பனை ஓலையில் வைத்து 5 நுங்குகள் ரூ.15 வரை விற்பனை செய்கின்றனர். பொதுமக்கள் கோடை வெயிலை சமாளிக்க இதனை வாங்கி விரும்பி சாப்பிடுகின்றனர். இதனால்

நுங்குகளை விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள் ளனர்.

**சாமராயப்பட்டியில் தென்னை விவசாயிகளுக்கு மானியம் சி.சண்முகவேலு எம்.எல்.ஏ வழங்கினார்**



மடத்துக்குளம், தென்னை விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் விழாவில் சி.சண்முகவேலு எம்.எல்.ஏ மானியத்தை வழங்கினார். தென்னை விவசாயம் மடத்துக்குளம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. நெல், கரும்பு, வாழை, காய்கறிகள் மட்டுமல்லாமல் தென்னை விவசாயத்திலும் அதிக அளவில் ஈடுபட்டு வருகின்றனர். தென்னை விவசாயத்தை ஊக்குவிக்கும் விதமாக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி தென்னை வளர்ச்சி வாரியத்தின் கீழ் மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பின் சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு மானியத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் ஒரு பகுதியாக புதிதாக தென்னங்கன்றுகளை நடவு செய்த விவசாயிகளுக்கு தென்னை பயிர் விரிவாக்க திட்டத்தின் கீழ் மானியம் வழங்கும் விழா மடத்துக்குளத்தை அடுத்த சாமராயப்பட்டியில் நடைபெற்றது. விழாவுக்கு சி.சண்முகவேலு எம்.எல்.ஏ தலைமை தாங்கினார். மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பின் தலைவர் ஜெபமணி வரவேற்று பேசினார். மடத்துக்குளம் தாசில்தார்

சண்முகவடிவேல் முன்னிலை வகித்தார். உடுமலை தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பின் தலைவர் பெரியநாயகம் தென்னை வாரியத்தின் திட்டங்கள் குறித்து பேசினார். <u>விவசாயிகளுக்கு மானியம்</u> நிகழ்ச்சியில் இந்த திட்டத்தில் கலந்து கொண்டு மானியம் பெறவும் மற்ற திட்டங்களில் கலந்து பயன்பெறவும் மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் விவசாயிகள் அணுகி பயன்பெற ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மேலும் நோய்தாக்குதல், வறட்சி, தீ விபத்து மற்றும் இயற்கை சீற்றங்களால் தென்னை மரங்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலையில் விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றி கொள்ள மரங்களுக்கு காப்பீடு செய்வதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது. விழாவில் தேர்வு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு ரூ.2 லட்சத்து 76 ஆயிரத்துக்கான காசோலை மற்றும் சான்றிதழ்களை சி.சண்முகவேலு எம்.எல்.ஏ வழங்கினார். மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பு செயலாளர் ராஜ்குமார் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் 100–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நத்தக்காடையூர் வாரச்சந்தையில் விற்பனைக்கு குவிந்த பலாப்பழங்கள்**



முத்தூர், திருப்பூர் மாவட்டம் நத்தக்காடையூரில் வாரந்தோறும் புதன்கிழமை வாரச்சந்தை நடைபெற்று வருகிறது. இந்த சந்தையில் நத்தக்காடையூர் சுற்றுவட்டார கிராம பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் தங்களது வீட்டிற்கு தேவையான காய்கறிகள், மளிகை சாமான்கள் வாங்கி சென்று வருகின்றனர். இந்த நிலையில் நேற்று நடைபெற்ற வாரச்சந்தையில் முக்கனிகளில் ஒன்றான பலாப்பழங்கள் கேரளா

மாநிலத்தில் இருந்து அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்டன. இதில் பலாப்பழங்கள் முழுப்பழங்களாகவும், சுளைகளாகவும் விற்பனை செய்யப்பட்டன. இதன்படி பெரிய அளவு பலாப்பழங்கள் ரூ.150 முதல் ரூ.200 வரையிலும், பலாச்சுளைகள் 10 ரூபாய்க்கு 10 சுளைகள் வரையிலும் விற்பனை செய்யப்பட்டன. இந்த பலாப்பழங்களை சுற்று வட்டார பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றனர். மேலும் கோடை வெப்பத்தை தணிக்கும் தர்ப்பூசணி பழங்கள் எடையை பொறுத்து ரூ.10 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்டன.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

பயிர்க் கடன் அளவை குறைக்கக் கூடாது: பிரதமருக்கு முதல்வர் கடிதம்விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பயிர்க் கடன் அளவையும், மானிய உதவி வழங்கும் முறையையும் மாற்றக்கூடாது என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து, பிரதமர் நரேந்திர மோடிக்கு புதன்கிழமை அவர் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் கூறியுள்ளதாவது: குறுகிய காலப் பயிர்களுக்கான வட்டி மானியத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தச் சூழலில், விவசாயிகளுக்கு சலுகை அடிப்படையில் கடன் கிடைக்கச் செய்வது அவசியமாகிறது.விவசாயிகள் வங்கிகள் மூலம் பெறும் கடன்களுக்கு 2 சதவீத மானியச் சலுகை பெறுவதுடன், உரிய நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதலாக 3 சதவீத மானிய உதவி வழங்கப்படுகிறது. இத்துடன் தமிழக அரசு தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மேலும் 4 சதவீத மானிய உதவி வழங்கி வருகிறது. இதன் மூலம், கூட்டுறவுச் சங்கக்

கடன்களை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, வட்டி இல்லாமல் கடன் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்போதைய வட்டி மானியத் திட்டம் இடைக்கால ஏற்பாடாக வரும் ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை மட்டுமே நீடிக்கும் என மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. தமிழகத்தில் பெரும்பாலான விவசாயிகளுக்கு குறுவை பயிருக்கான கடன் ஜூன் மாதத்துக்குப் பிறகே தேவைப்படும். சம்பா, பிற பயிர்களுக்கு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்குப் பின்னர் கடன் தேவைப்படும். வட்டி மானியத் திட்டம் வரும் ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குப் பிறகும் நீடிக்க வேண்டும்.

வங்கிகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கும் வழக்கமான வட்டி விகிதத்தில் விவசாயிகளுக்கு கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவதாக விவசாயிகள் கடனை திரும்பச் செலுத்திவிட்டு, பின்னர் நேரடி மானிய திட்டத்தின் மூலம் வட்டி மானியத்தை பெற வகை செய்யவும், இரண்டு திட்டங்களை மத்திய அரசு பரிசீலித்து வருவதாக தெரிகிறது. பயிர்க் கடன்களுக்கான சலுகைகளை குறைப்பது பிற்போக்கான நடவடிக்கையாக அமைந்து விடும். நாட்டின் பல பகுதிகளில் பருவம் தவறி பெய்த மழை காரணமாக, ஏராளமான பயிர்கள் சேதமடைந்திருப்பதைக் கருத்தில் கொண்டும், வழக்கமான பருவ மழை குறைய வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதைக் கருத்தில் கொண்டும் பார்க்கும்போது, விவசாயக் கடன்களுக்கு சலுகைகளைக் குறைப்பது பெரும் அபாயத்தில் கொண்டு போய்விடும். விவசாயிகள் அதிக வட்டி செலுத்தி விட்டு, அதன் பின்னர் அந்தத் தொகையை நேரடி மானியம் முறையில் பெறுவது சரியான முடிவாக இருக்காது. எனவே வட்டி மானியத் திட்டத்தில் செய்யப்படவுள்ள மாற்றத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும். பயிர்க்கடனுக்கான சலுகைகளை குறைக்கக் கூடாது. மானியக் கடன் வழங்கும் முறையில் எந்த மாற்றமும் கொண்டு வரக்கூடாது.

மானிய உதவித் திட்டத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வருவதற்கு முன்பாக, அது குறித்து தேசிய வளர்ச்சிக் குழுவில் இடம்பெற்றுள்ள அனைத்து முதல்வர்களுடனும் கலந்தாலோசித்தோ அல்லது நீதி ஆயோக் அமைப்பின் நிர்வாக கவுன்சிலில் ஆலோசனை நடத்தியோ அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகே அமல்படுத்த வேண்டும் என்றும் தனது கடிதத்தில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

**ஆண்டு முழுவதும் பயிரிடலாம் பப்பாளி!**



பழ வகைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகள் ஆண்டு முழுவதும் சாகுபடியை மேற்கொள்ளும் வகையில், பப்பாளியைத் தேர்வு செய்வதன் மூலம் நல்ல மகசூலையும், அதிக லாபத்தையும் ஈட்டலாம் என தோட்டக்கலைத் துறை தெரிவித்துள்ளது.இதுகுறித்து தோட்டக்கலைத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு: ரகங்கள்: பப்பாளி பயிரிட கோ.1, கோ.2, கோ.3, கோ.4, கோ.5, கோ.6, கோ.7 மற்றும் கூர்க்கனிடியூ மற்றும் சூரியா இவற்றுள் கோ.2, கோ.5 மற்றும் கொ.6 பப்பெயின் எடுப்பதற்கும் உண்பதற்கும் உகந்தது. கோ.3, கோ.7 இருபால் ரகங்களாகும். மண், தட்பவெப்பநிலை: பப்பாளிப் பயிர் பலவகைப்பட்ட மண்ணிலும் வளரக் கூடியது. எனினும் களிமண் பூமியில் சாகுபடி செய்ய முடியாது. சமவெளிப் பகுதிகளில் மிதமானது முதல் சற்றே வெப்பம் அதிகமாக நிலவும் இடங்களில் நன்கு வளரும். மலைப் பகுதிகளில் சுமார் 1,200 மீட்டர் உயரம் வரை வளரும். நல்ல வடிகால் வசதி இருப்பதன் மூலம் தண்டுப் பகுதியில் ஏற்படும் அழுகல் நோய்களைக்

கட்டுப்படுத்தலாம். பருவம்: ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம். இருப்பினும் ஜூன் முதல் செப்டம்பர் வரை உள்ள காலங்கள் பப்பாளி சாகுபடிக்கு மிகவும் ஏற்றவை. நடவுப் பருவத்தில் அதிக மழை இல்லாமல் இருப்பது நல்லது. நிலம் தயாரித்தல்: நிலத்தை 2 அல்லது 3 முறை உழுது சமன் செய்து கொள்ள வேண்டும். பிறகு 1.8 மீட்டர் இடைவெளியில் 45 செ.மீ. நீளம், 45 செ.மீ. அகலம் மற்றும் 45 செ.மீ. ஆழத்தில் குழிகள் எடுக்கவேண்டும். பின்பு குழிகளில் மண் மற்றும் தொழு உரம் நிரப்பி நாற்றுக்களை குழியின் மத்தியில் நடவேண்டும். விதைப்பு: ஒரு ஹெக்டருக்கு 500 கிராம் விதைகள் போதுமானது. நாற்றாங்கால்: ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கேப்டான் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். நேர்த்தி செய்த விதைகளை தொழு உரம் மற்றும் மண் நிரப்பிய பாலிதீன் பைகளில் ஒரு செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். ஒரு பாலிதீன் பையில் நான்கு விதைகள் விதைக்க வேண்டும். பிறகு பைகளை நிழல்படும் இடத்தில் வைத்து பூவாளி கொண்டு தண்ணீர் ஊற்ற வேண்டும். நாற்றுக்கள் 60 நாளில் நடவுக்குத் தயாராகி விடும்.

நீர் நிர்வாகம்: வாரம் ஒரு முறை நீர்ப் பாய்ச்ச வேண்டும். செடிகளைச் சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை: ஆண், பெண் செடிகளை நீக்கியவுடன் செடி ஒன்றுக்கு 50 கிராம் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகளை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அளிக்க வேண்டும். மேலும் செடி ஒன்றுக்கு 20 கிராம் அசோஸ்பைரில்லம் அல்லது பாஸ்போபாக்டீரியா அளிக்க வேண்டும். உரம் இட்ட பின் நீர்ப் பாய்ச்ச வேண்டும்.நுண்ணோட்டச் சத்து: துத்தநாக சல்பேட் 0.5 சதவீதம் மற்றும் போரிக் அமிலம் 0.1 சதவீதம் என்ற கலவையை நடவு செய்த 4ஆவது மற்றும் 8ஆவது மாதங்களில் தெளிப்பதன் மூலம் வளர்ச்சி மற்றும் மகசூல் அதிகரிக்கும். பின்செய் நேர்த்தி: செடிகள் பூக்க ஆரம்பிக்கும்போது, 15

முதல் 20 பெண் செடிகளுக்கு ஒரு ஆண் செடியை விடவேண்டும். ஒரு குழியில் ஒரு பெண் செடியை விட்டு விட்டு இதர ஆண், பெண் செடிகளை நீக்கவேண்டும். கோ.3 மற்றும் கோ.7 போன்ற இருபால் ரகங்களில் இருபால் பூக்கள் கொண்ட மரங்களை மட்டும் வைத்துக் கொண்டு பெண் மரங்களை நீக்கிவிடவேண்டும்.பயிர் பாதுகாப்பு: நாற்றாங்காலில் நூற்புழு தாக்குதலைத் தடுக்க ஒரு பாலிதீன் பையில் ஒரு கிராம் கார்போ பியூரான் 3 ஜி குருணை மருந்தை இடவேண்டும்.வேர் அழுகல் நோய்: செடியின் மேல் பாகத்தைச் சுற்றி தண்ணீர் தேங்கி நின்றால் இந்நோய் பரவும். இந்நோய் தாக்கிய செடிகள் வாடி இறந்துவிடும். இதைக் கட்டுப்படுத்த 0.1 சத போர்டோக் கலவை அல்லது 0.2 மயில்துத்ததம் கரைசலை வேர்கள் நனையுமாறு ஊற்ற வேண்டும். 15 நாள் இடைவெளியில் 2 அல்லது 4 முறை உபயோகிக்க வேண்டும்.

அறுவடை: பழங்களின் தோல் சற்றே மஞ்சள் நிறமாக வரும் போது அறுவடை செய்யவேண்டும். வயது: 24 முதல் 30 மாதங்கள்.

மகசூல்: கோ.2 ரகமாக இருந்தால் ஹெக்டேருக்கு 250 டன்களும், கோ. 3 ரகத்தில் 120 டன், கோ.5 ரகத்தில் 250 டன், கோ. 8 ரகத்தில் 160 டன், கோ.7 ரகத்தில் 225 டன்களும் மகசூல் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாட்டுக் கோழி வளர்த்தால் நல்ல லாபம்!**



வீடுகளில் இருந்தபடியே நாட்டுக் கோழியை நல்ல முறையில் வளர்த்துப் பராமரித்து அதிகப் பயன் பெறலாம் என்று திரூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தினர் ஆலோசனை கூறியுள்ளனர்.இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் வரையில் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகளிலும் நாட்டுக் கோழிகள் வளர்க்கப்பட்டு வந்தன. இதன் மூலம் தங்களது வீடுகளுக்கு தேவையான கோழி முட்டை, இறைச்சி ஆகியவை கிடைத்து வந்தன.மேலும், தனது தேவைக்கு மேல் உள்ள கோழிகளை விற்றும் பணம் சம்பாதித்து வந்தனர். ஆனால், நாளடைவில் கிராமப்புறங்களில் கோழி வளர்ப்பு மறைந்து வருகிறது.குறைந்த முதலீட்டிலும், குறைந்த பராமரிப்பிலும் அதிக பலன் தரும் தொழிலாக நாட்டுக் கோழி வளர்ப்பு உள்ளது. எனவே இந்தத் தொழிலை மேற்கொண்டால் விவசாயிகளும், வீட்டில் உள்ள பெண்களும் பயன்பெற முடியும்.நாட்டுக் கோழிகளின் வகைகள்: கொண்டைக் கோழி, கழுகுக் கோழி, சண்டைக் கோழி, குருவுக் கோழி, கருங்கால் கோழி ஆகிய கோழி வகைகளை தனித்தனியே அடையாளம் காண முடியாத போனாலும் அதன் வண்ணங்களை வைத்தே அடையாளம் காண முடியும்.இனப் பெருக்கம்: நன்கு வளர்ந்த கோழிகள் 25 முதல் 30 வார வயதில் முட்டையிட தொடங்கும். நல்ல தீவனம் கிடைத்தால் 20 வாரத்திலேயே முட்டையிடும். ஆண் சேவல் 20 வாரங்களுக்கு மேல் நன்கு வளர்ந்த கொண்டையுடன் இருக்கும்.

அதிகாலையில் கொக்கரக்கோ என கூவுவதை வைத்து இனவிருத்திக்கு தயாரானது என அறிந்து கொள்ளலாம்.முட்டையிடுதல்: முதலில் முதிராத ஓட்டுடன் சிறிய அளவில் முட்டையிடும். அந்த முட்டை தோல் முட்டை எனப்படும். அதைத் தொடர்ந்து சரியான அளவில் தொடர்ந்து முட்டையிடும். கோழிகள் முட்டையிடும்போது ஒரு வித சப்தத்தை எழுப்பும். அதை கேவுதல் என கூறுவர்.கோழிகளிடம் இருந்து முட்டைகளைப் பிரித்து குளிர்ச்சியான இடத்தில் வைக்க வேண்டும். துளையிடப்பட்ட மண் பானை அல்லது மரப்பெட்டியில் உமி அல்லது மரத்தூள் பரப்பி அதன்மேல் முட்டைகளைப் பாதுகாப்பாக வைக்கலாம்.

ஒரு கோழி சராசரியாக 10 முதல் 20 நாள்களில் முட்டையிடும். பின்னர் அதை அடைகாத்து குஞ்சு பொறிக்கும். ஒரு ஆண்டுக்கு 60 முதல் 120 முட்டைகள் வரை இடும்.அடை கட்டுதல்: நாட்டுக் கோழிகளை முட்டைகளின் மேல் அமர வைத்து அடை காக்க வைக்க வேண்டும். ஓர் நல்ல கூடையில் பாதியளவு உலர்ந்த தவிடு, மரத்தூள், வைக்கோல், கூளம் இவற்றில் ஏதாவது ஒன்றை நிரப்பி நடுவில் சிறிதளவு குழி போல் செய்து கொள்ள வேண்டும். அதன்மேல் சேகரித்த முட்டைகளை வைக்க வேண்டும்.அதிகபட்சமாக 15 முட்டைகள் வரை வைக்கலாம். இந்த கூடைக்குள் கோழி அமர்ந்து அடை காக்கும். அந்த நேரத்தில் நாம் அதை நெருங்கினால் எச்சரிக்கை சப்தம் செய்யும்.கோழி குஞ்சி பொறிக்கும் காலம் 21 நாள்கள் ஆகும்.அடையில் உள்ள தாய் கோழி 2 அல்லது 3 நாள்கள் வரையில் அடையில் அமர்ந்திருக்கும். பின்னர் எழுந்து சென்று எச்சம் இட்டு, உணவு, தண்ணீர் அருந்தி விட்டு மீண்டும் வந்து அமரும். எனவே அந்தக் கூடை அருகிலேயே உணவு, தண்ணீரை வைத்திருக்க வேண்டும். தினமும் தாய்க் கோழியைப் பார்த்துக் கொள்ள வேண்டும். தாய்க் கோழியுடன் நன்கு பழகியவர்கள் தாய்க் கோழியை அகற்றிவிட்டு முட்டையை ஆய்வு செய்யலாம். அடை காக்கத் தொடங்கிய 21 நாள்களில் குஞ்சு பொறிக்கும்.**பராமரிப்பு:** நாட்டுக் கோழிகள் தங்களது

குஞ்சுகளுக்குத் தேவையான வெப்பத்தை இறகுகளுக்கு இடையில் வைத்துக் கொள்ளும். ஆரம்ப காலத்தில் பருந்து, காகம், கழுகு ஆகியவை குஞ்சுகளை கொத்திச் செல்லப் பார்க்கும். எனவே தாய்க் கோழி குஞ்சுகளுடன் இருப்பது அவசியம். கோழிகளையும், குஞ்சுகளையும் இரவு நேரத்தில் அடைத்து வைப்பது சிறந்தது.தீவனம்: ஆரம்ப காலத்தில் உடைந்த அரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு, மக்காச் சோளம் ஆகியவற்றை தீவனமாகக் கொடுக்கலாம். அதைத் தொடர்ந்து நாட்டுக் கோழிகள் தனக்கும், தனது குஞ்சுகளுக்கும் தாங்களே தீவனங்களைத் தேடிக் கொள்ளும். உதாரணமாக புழு, சிறு பூச்சிகள், கரையான்கள் போன்றவற்றை உண்டு தங்களது பசியைப் போக்கிக் கொள்ளும்.

நோய்த் தடுப்பு: நாட்டுக் கோழிகளில் பொதுவாக நோய்த் தடுப்பு முறையைக் கையாளத் தேவையில்லை. இருப்பினும் ராணிகேட் தடுப்பூசியை 8 வார வயதில் போடுவது நல்லது. ஒவ்வொரு வாரமும் புதன், சனிக்கிழமைகளில் கால்நடை மருந்தகம், கிளை நிலையங்களில் இந்தத் தடுப்பூசி இலவசமாகப் போடப்படுகிறது.தடுப்பூசிக்கு முன்னதாக மாதம் ஒருமுறை குடற்புழு நீக்கம் செய்வது நல்லது. இந்த முறையில் நாட்டுக் கோழிகளைப் பராமரித்தால் வீட்டில் இருந்தபடியே முட்டைகளை சந்தைப்படுத்தியும், கோழிகளை விற்றும் பயன்பெறலாம் என திரூர் வேளாண் அறிவியல் நிலையத்தினர் கூறியுள்ளனர்.

## கொடைக்கானலில் பிளம்ஸ் விளைச்சல் அமோகம்: விவசாயிகள் மகிழ்ச்சி

கொடைக்கானலில் மழை பெய்து வந்ததால், பிளம்ஸ் அதிக விளைச்சல் கண்டுள்ளதை அடுத்து, விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கொடைக்கானல் பகுதிகளான செண்பகனூர், அட்டுவம்பட்டி, வில்பட்டி, புலியூர், குருசடி, மாட்டுப்பட்டி, பெரும்பள்ளம், சின்னப்பள்ளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பிளம்ஸ் பழம் விளைவிக்கப்படுகிறது.

இப்பழத்தை, விவசாயிகள் ஊடுபயிராக விளைவித்து வருகின்றனர். ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் இவற்றின் விளைச்சல் அதிகமாக இருக்கும். இங்கு, கடந்த 20 நாள்களாக பரவலாக மழை பெய்து வருவதால், பிளம்ஸ் விளைச்சல் அதிகரித்துள்ளது. இங்கு விளையும் பிளம்ஸ் பழம் தமிழகம் முழுவதும் அனுப்பப்படுகிறது. தற்போது, ஒரு கிலோ ரூ. 200-க்கு விற்கப்படுவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வாங்கிச் செல்வதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**காரியாபட்டி பகுதியில் கோடை மழை: விவசாயப் பணிகள் தீவிரம்**

**By காரியாபட்டி**

காரியாபட்டி பகுதியில் கோடை மழை பெய்ய தொடங்கியுள்ளதால் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன. காரியாபட்டி ஒன்றியப் பகுதிகளில் 27,294 ஹெக்டேர் புன்செய், 1328 ஹெக்டேர் நன்செய் நிலத்தில் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். 2014 ஏப்ரல் முதல் 2015 மார்ச் முடிய 6,900 ஹெக்டேர் நிலத்தில் பயிர் சாகுபடி பணிகளை மேம்படுத்த வேளாண் துறை அதிகாரிகள் திட்டமிட்டிருந்தனர். கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்துப் போனதால் 2,800 ஹெக்டேர் நிலத்தில் மட்டுமே சாகுபடி நடந்தது. காரியாபட்டி பகுதியில் முடுக்கன்குளம், அல்லாளப்பேரி, புதுப்பட்டி, தோப்பூர் கிராமப் பகுதிகளில் மட்டும் ஓரளவு நல்ல மழை பெய்தது.இதையடுத்து இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் நெல் சாகுபடி செய்தனர். இந்நிலையில் காரியாபட்டி ஒன்றியப் பகுதிகளில் தற்போது பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. வரும் ஜூன் முதல் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் தற்போதே நிலத்தை பன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.தென்மேற்கு பருவமழைக்கு முன்பே கோடை மழை தொடங்கியுள்ளதால் வேளாண் துறையினர் இந்த ஆண்டு விவசாய

பரப்பை அதிகரிக்க திட்டமிட்டுள்ளனர்.நெல் சாகுபடி 1100 ஹெக்டேர், தானிய பயிர் 3160 ஹெக்டேர், பயறு சாகுபடி 1500 ஹெக்டேர், பருத்தி சாகுபடி 600 ஹெக்டேர், எண்ணெய் வித்து பயிர் சாகுபடி 500 ஹெக்டேர் என சாகுபடிக்கு இலக்கு நிர்ணயித்துள்ளனர்.கோடை மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயி சங்கர் கூறியதாவது: இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பே கோடை மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் விவசாயப் பணிகளை தற்போதே தொடங்கி விட்டோம் என்றார்.

**விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டல் பயிற்சி**

பொள்ளாச்சியை அடுத்த மணக்கடவு வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் மற்றும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி ஆகியன இணைந்து விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டல் பயிற்சியை செவ்வாய்க்கிழமை நடத்தின.இப்பயிற்சிக்கு, வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவன முதல்வர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். நபார்டு வங்கியின் செயல்பாடுகள், நோக்கம், உழவர் உற்பத்தியாளர் அமைப்பு உள்ளிட்டவை குறித்து திருப்பூர் மாவட்ட நபார்டு வங்கி துணைப் பொதுமேலாளர் ஸ்ரீராம் விளக்கமளித்தார். உடுக்கம்பாளையம் ஊராட்சித் தலைவர் சண்முகம் சிறப்புரையாற்றினார். வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவன உதவிப் பேராசிரியர்கள் கிருஷ்ணமூர்த்தி, தமிழ்ச்செல்வி, காளிதாஸ், முத்துக்கண்ணன் ஆகியோர் விவசாயிகளுக்கு தென்னை வளர்ப்பு, மதிப்புக் கூட்டல், தேங்காய் எண்ணெய் தயாரித்தல் குறித்து பயிற்சி அளித்தனர்.இப்பயிற்சியில் 50 விவசாயிகள் பங்கேற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மைக் கல்வி நிறுவன உதவிப் பேராசிரியர்கள் காளிதாஸ், ஹரிபிரசாத், ரஞ்சித்குமார் உள்ளிட்டோர் செய்திருந்தனர்

**பசுமை உழவர் மன்றம் துவக்கம்**

பல்லடம் அருகே கொடுவாய் நாகலிங்கபுரத்தில் பசுமை உழவர் மன்றத் தொடக்க விழா புதன்கிழமை நடைபெற்றது. இந்த விழாவுக்கு உழவர் உழைப்பாளர் சங்கத்தின் நிறுவனத் தலைவர் பொங்கலூர் இரா.மணிகண்டன் தலைமை வகித்தார். பசுமை உழவர் மன்றப் பொருளாளர் என்.முத்துசாமி முன்னிலை வகித்தார். அதன் தலைவர் கே.எஸ்.ரவிக்குமார் வரவேற்றார்.இதில், பசுமை உழவர் மன்றத்தை நபார்டு வங்கியின் திருப்பூர் மாவட்ட உதவிப் பொதுமேலாளர் வி.எஸ்.ஸ்ரீராம் துவக்கி வைத்தார். திருப்பூர் கால்நடைப் பல்கலைக் கழகப் பயிற்சி, ஆராய்ச்சி மையத் தலைவர் ஆர்.செல்வராஜ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் வி.கணேசன், மாவட்ட நிதி சார் கல்வி மையத்தின் நிதி சார் ஆலோசகர் பி.குப்புசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

இதில், பொங்கலூர் மணிகண்டன் பேசியது. திருப்பூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஊரிலும் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் உழவர் மன்றங்களை தொடங்க இலக்கு நிர்ணயம் செய்துள்ளோம். விவசாயிகள், வங்கிகள், அரசுக்குப் பாலமாக இருந்து செயல்படுவதே உழவர் மன்றத்தின் நோக்கமாகும். விவசாய விளைப் பொருள்களைத் தேவைக்கு ஏற்ப மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றவும், அவற்றை சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் உழவர் மன்றங்களே, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களைத் தொடங்கலாம். திருப்பூர் மாவட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட உழவர் மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1000 விவசாயிகளை ஒன்றிணைத்து, விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் அடுத்த மாதத்தில் செயல்படவுள்ளது. இனி, விவசாயிகளே விற்பனையாளர்களாக மாறி விவசாயத் தொழிலதிபர்களாக மாறும் சூழ்நிலையை மத்திய அரசும், நபார்டு வங்கியும் உருவாக்கிக் கொடுத்துள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். இதில், உழவர் மன்றத் தலைவர்கள் கே.பி.சுப்பிரமணியம்

(கோவில்பாளையம்), ஆர்.பாலசுப்பிரமணியம் (தங்காய்புதூர்), நாச்சிமுத்து (வஞ்சிபாளையம்), கோபாலகிருஷ்ணன் (கவுண்டன்பாளையம்) உள்ளிட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

**மாற்றுப் பயிர் சாகுபடிக்கு ஆலோசனை வழங்க வேண்டும்**

மாற்றுப் பயிர் சாகுபடிக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்,ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இதற்கு, ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் கனகசபை, கோட்டாட்சியர்கள் முருகேசன் (திருப்பூர்) சரவணமூர்த்தி (தாராபுரம்), சாதனைக்குரள்(உடுமலை) ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், பல்வேறு பிரச்னைகள் குறித்து விவசாயிகள் பேசினர்.ஊத்துக்குளிப் பகுதி விவசாயிகள்: கவுண்டம்பாளையத்தில் பிரிண்டிங் நிறுவனங்களில் இருந்து இரவு நேரத்தில் சுத்திகரிக்கப்படாத சாயக்கழிவுநீர் வெளியேற்றப்படுவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது.ஆட்சியர்: இப்பிரச்னை குறித்து மாசுக்கட்டுப்பாடு வாரிய அலுவலர்கள் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அமராவதி சர்க்கரை ஆலையில், சில தினங்களில் கரும்பு அரவைப் பணி தொடங்கப்படும்.கோபால் (விவசாயி): கிராமப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க,ரூ. 5,000 கட்டணம் செலுத்தி, ஊராட்சித் தலைவரிடம் அனுமதி பெற வேண்டும். அனுமதி கிடைக்காதபட்சத்தில், 15 நாள்களுக்கு பின்னர், ஆட்சியரிடம் அனுமதி பெற வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். திருப்பூர், கோவை, ஈரோடு, சேலம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பெரும்பாலும் ஆழ்துளைக் கிணறுகளை நம்பிதான் விவசாயம் செய்யப்படுகிறது.எனவே, இந்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.

விவசாயிகளின் இக்கோரிக்கையை அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஈஸ்வரமூர்த்தி: தாராபுரம் வட்டத்தில் விவசாயிகளுக்கு ரூ. 33-க்கு விற்பனை செய்யும் விதை நெல் உரிமையாளர்கள், விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் போது கிலோ ரூ.13.70}க்கு கொள்முதல் செய்கிறார்கள். அரசு நிர்ணயித்துள்ள விலையான ரூ.14.50-க்கும் குறைவாகதான் கொள்முதல் செய்யப்படுகிறது. இது தொடர்பாக தாராபுரம் கோட்டாட்சியர் தலைமையில் முத்தரப்புக் கூட்டம் நடத்தியதையடுத்து கூடுதலாக 50 பைசா தருவதாகத் தெரிவித்தனர். விதை நெல் உரிமையாளர்கள் பாரபட்சமின்றி அனைத்து விவசாயிகளுக்கும் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும்.

பழனிச்சாமி: வெள்ளக்கோவில் உத்தமபாளையம் கிராமத்தில் வட்டமலைக்கரை ஓடையில் நீர் இல்லாததால், சுமார் 30 ஆண்டுகளாக இந்த பகுதியில் வறட்சி நிலவுகிறது. எனவே, ஓடைக்கு பி.ஏ.பி. வாய்க்கால் தண்ணீர் விட வேண்டும்.ஆட்சியர்: இந்த ஓடைக்கு, அமராவதி பாசனத் திட்டத்தின் மூலமாகத் தண்ணீர் நிரப்புவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.மதுசூதனன்: திருப்பூர் மாவட்டத்தில் மழை நன்றாகப் பெய்துள்ளது. ஆனால், விளைவித்தப் பயிர்களுக்கு விலை கிடைக்காமல் நஷ்டம் ஏற்படுகிறது. ஒரே சமயத்தில்,

குறிப்பிட்ட பயிரை அபரிமிதமாக உற்பத்தி செய்து விவசாயிகள் இழப்பைச் சந்திக்காமல் இருக்க வேளாண்மைத் துறையும், வேளாண் பல்கலைக் கழகமும் இணைந்து மாற்றுப் பயிர்களைச் சாகுபடி செய்வதற்கான ஆலோசனை வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு வாழ்வாதாரமாக பால் உற்பத்தி இருக்கிறது. ஆனால், தனியார் நிறுவனங்கள் பால் கொள்முதல் செய்வதை குறைத்து விட்டன. ஆவின் பால் கொள்முதல் நிலையங்களில் நிர்ணயித்த விலையை முறையாகக் கொடுக்க வேண்டும்.

**ஏற்காட்டில் மிளகு அறுவடை தொடக்கம்**

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் மிளகு அறுவடை தொடங்கியுள்ளது.சேர்வராயன் மலையில் உள்ள ஏற்காடு மலைக் கிராமங்களில் உள்ள காபி தோட்டங்களில் ஊடு பயிராக சாகுபடி செய்யப்பட்ட மிளகு தற்போது அறுவடை செய்யப்படுகிறது.ஏற்காட்டில் உள்ள 67 மலைக் கிராமங்களில் தலைச்சோலை, வேலூர், செம்மநத்தம், மஞ்சக்குட்டை, நாகலூர், வெள்ளக்கடை, ஏற்காடு, மாரமங்கலம், வாழவந்தி பகுதிகளில் காபி செடிகளுக்கு நிழல் தரும் வகையில் சில்வர் ஓக் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த மரங்களில் மிளகு கொடிகள் படரவிட்டு வளர்க்கப்படுகின்றது. காபி செடிகளுக்கு அளிக்கப்படும் உரம், மிளகு செடிகளுக்கும் கிடைப்பதாலும், ஏற்காடு தட்பவெப்ப நிலை ஏற்றதாக உள்ளதாலும் மிளகு விளைச்சல் அதிக அளவில் கிடைத்துள்ளது.கடந்த ஆண்டு கிலோ ரூ.850 வரை விற்கப்பட்டது. தற்போது கிலோ ரூ.500 முதல் ரூ.600 வரையில் தான் விலை கிடைக்கிறது.காபி தோட்டங்களில் மிளகு அறுவடையில் ஆண்கள், பெண்கள் ஈடுபட்டுள்ளனர். உயரமான சில்வர் ஒக் மரங்களில் 30 அடி உயரத்துக்கு மூங்கில் ஏணி அமைத்து பச்சை மிளகுகளை அறுவடை செய்கின்றனர். நாளொன்றுக்கு 100 கிலோ வரை அறுவடை செய்வதாக தொழிலாளிகள் தெரிவித்தனர். 100 கிலோ பச்சை மிளகை காயவைத்தால் 25 கிலோ உற்பத்தி கிடைப்பதாக விவசாயி மகேஸ்வரி குமார் தெரிவித்தார்.